**<u>சிக்காடோக்கா இலை புள்ளி நோயினை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:</u>**

1. வாழை தோட்டங்களில் நல்ல வடிகால் வசதி செய்திட வேண்டும். தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். புரிந்துரை
2. களைகளை அவ்வப்பொழுது அகற்றி வயலினை சுத்தமாக வைக்க வேண்டும்.
3. வாழைக்கன்றுகளை சரியான, பரிந்துரை செய்யப்பட்ட இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நெருக்கி நடவு செய்வதை தவிர்க்க வேண்டும்.
4. காய்ந்த இலைகளை அகற்றி அவற்றை நிலத்திலேயே போடாமல் நிலத்திற்கு வெளியே கொண்டு சென்று போட்டு, தீ வைத்து அழித்திடல் வேண்டும்.
5. கார்பன்டாசிம் 2 கிராம்/லிட்டர் அல்லது மான்கோசெப் 2 கிராம்/லிட்டர் அல்லது காப்பர் ஆக்ஸி குளோரைடு 2.5 கிராம்/லிட்டர் அல்லது ஸிரம் 2 மி.லிட்டர்/ லிட்டர் இலைகளில் தெளித்து நோயை கட்டுப்படுத்தவும் மாதாந்திர இடைவெளியில் மூன்று முறை தெளித்து வரவேண்டும்.
6. பேசிலஸ் சப்டிலிஸ் 5கிராம்/லிட்டர் மூன்று முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து சிக்காடோகா இலைப்புள்ளி நோயை கட்டும்படுத்தலாம்.
7. சான்டோவிட் அல்லது ட்ரிட்டான் AE அல்லது டீபால் 10 லிட்டர் தெளிப்பு திரவத்திற்கு எப்போதும் 5 மி.லிட்டர் ஈரப்பதமூட்டும் திரவத்துடன் சேர்க்கவும்.